# குயின்ஸ்லாந்து மாநிலத்தில், இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலுக்கு, பொதுவாக பயன்படுத்தப்படும் ஆவணங்கள்.

### இறுதி கால பராமரிப்பு சுகாதார உத்தரவு
**(Advance Health Directive)**

சுயமாக ஒருவரால் முடிவெடுக்க முடியாத நிலை அல்லது அவரது தீர்மானங்களை வெளியே சொல்ல முடியாத நிலை வருவதற்கு முன்னரே, எப்படியான சுகாதார பராமரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற முடிவை எடுத்து அந்த தீர்மானங்களைப் பதிவு செய்யும் ஆவணம் இது. இந்த ஆவணத்தில் குடும்ப மருத்துவர் மற்றும் சட்ட ஆலோசகர் கையெழுத்திட்டிருக்க வேண்டும்; அதற்கு இன்னொருவர் சாட்சியளிக்க வேண்டும். இதற்குத் தேவையான படிவங்களை **justice.qld.gov.au** என்ற இணையத்தளத்தில் பெறலாம்.

### நீடித்த அதிகார பத்திரம்
**(Enduring Power of Attorney)**

சுயமாக ஒருவரால் முடிவெடுக்க முடியாத நிலை அல்லது அவரது தீர்மானங்களை வெளியே சொல்ல முடியாத நிலை வருவதற்கு முன்னரே, அவருக்காக இன்னொருவர் முடிவு எடுக்கலாம் என்ற அதிகாரம் வழங்கும் ஆவணம் இது. இந்த ஆவணத்தில் சட்ட ஆலோசகர் மற்றும் யாருக்கு அந்த அதிகாரம் வழங்கப்படுகிறதோ அவர் (அல்லது அவர்கள்) கையெழுத்திட்டிருக்க வேண்டும்; அதற்கு இன்னொருவர் சாட்சியளிக்க வேண்டும். இதற்குத் தேவையான படிவங்களை **justice.qld.gov.au** என்ற இணையத்தளத்தில் பெறலாம், அல்லது உங்கள் வழக்குரைஞர் அல்லது பொது அறங்காவலரிடம் கேளுங்கள்.

### தெரிவுகள் குறித்த அறிக்கை
**(Statement of Choices)**

இந்த ஆவணம் உங்கள் விருப்பங்கள், விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. தேவைப்பட்டால், உங்களுக்கு நெருக்கமானவர்கள் உங்கள் சார்பாக, சுகாதார நல முடிவுகளை எடுக்க இந்த ஆவணம் உதவும். இது உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மன ஆறுதல் அளிக்கிறது. ஆவணத்தில் ஒரு மருத்துவர் கையெழுத்திட வேண்டும். தேவையான படிவங்களை mycaremychoices.com.au என்ற இணையத்தளத்தில் பெறலாம். இது குறித்து உங்கள் குடும்ப மருத்துவரிடம் பேசுங்கள் அல்லது இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் "Office of Advance Care Planning" பணிமனையை தொடர்பு கொள்ளுங்கள்.

## இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் பணிமனை

குயின்ஸ்லாந்து மாநில சுகாதாரத் துறையின் இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் பணிமனை, இரகசியமான, பாதுகாப்பான பின்வரும் இலவச சேவைகளை வழங்குகிறது.

- இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடுதலுக்குத் தேவையான தகவல் மற்றும் படிவங்களை வழங்குதல்
- உங்கள் உள்ளூர் பகுதியில் இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடுதல் குறித்து யாருடன் பேச வேண்டும் என்று உங்களுக்கு ஆலோசனை கூறுதல்
- உங்களது இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடல் ஆவணங்களின் நகல்களை குயின்ஸ்லாந்து மாநில சுகாதாரத்துறை மருத்துவ பதிவில் சேர்த்தல்
- இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடுதல் குறித்த உங்கள் கேள்விகளுக்குப் பதிலளித்தல்.

இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் பணிமனையை தொடர்பு

கொள்ள:

1300 007 227
1300 008 227
PO Box 2274, Runcorn Qld 4113
acp@health.qld.gov.au
mycaremychoices.com.au

உங்களுக்கு மொழி பெயர்ப்பு அல்லது மொழி பெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால்,

Call 13 14 50 ஐ அழைக்கவும்

- தமிழ் மொழியில் பேச விரும்புவதாக தெரிவிக்கவும்
- இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் "Office of Advance Care Planning" பணிமனையுடன் 1300 007 227 என்ற இலக்கத்தில் தொடர்பினை ஏற்படுத்துமாறு கேட்கவும்.

Interpreter

# எனது பராமரிப்பு, எனது தெரிவுகள்

நீங்கள் திடீரெனக் காயமடைந்தால் அல்லது தீவிரமாக நோய்வாய்ப்பட்டால், உங்கள் சுகாதார நல பராமரிப்பு குறித்த விருப்பங்கள் எவை என்பதை மருத்துவ ஊழியர்களுக்கு எப்படித் தெரிவிப்பது?



*உங்கள் எதிர்கால சுகாதார நல பராமரிப்பு குறித்த முடிவுகளை நீங்களே மேற் கொள்ளுங்கள்.*

mycaremychoices.com.au

OACP
Statewide Office of Advance Care Planning

Queensland Government

## இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடல் என்றால் என்ன??

இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடல் என்பது, எதிர்காலத்தில் சுகாதார நல பராமரிப்புக்கான உங்கள் விருப்பங்களைப் பற்றி சிந்தித்து, அவற்றை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு செயல்முறையாகும். சுயமாக ஒருவரால் முடிவெடுக்க முடியாத நிலை அல்லது அவரது விருப்பங்களை வெளியே சொல்ல முடியாத நிலை வரும் போது இந்த பராமரிப்பு திட்டம் பயன்படுத்தப்படும்.

இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடல் ஒரு தன்னார்வ செயல்பாடு. அதில் பின்வருபவை அடங்கும்:

- உங்களது விழுமியங்கள், சுகாதார நல பராமரிப்பு குறித்த உங்கள் விருப்பங்கள் மற்றும் வாழ்க்கைத் தரம் குறித்த உங்கள் தேர்வுகள் பற்றி சிந்தித்து, உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களுடன் கலந்துரையாடுவது
- தேவைப்பட்டால், உங்கள் சார்பாக முடிவெடுப்பதற்கு ஒருவரையோ அல்லது சிலரையோ நியமிப்பது
- சுகாதார நல பராமரிப்பு குறித்த உங்கள் விருப்பங்களை ஒரு ஆவணத்தில் எழுதுவது.

இறுதி கால பராமரிப்பு குறித்து திட்டமிடல் என்பது ஒரு உயில் எழுதுவதைப் போல, உங்கள் எதிர்காலம் பற்றித் திட்டமிடுதலின் ஒரு பகுதியாகும்.

## ஏன் முன்னரே திட்டமிட வேண்டும்?

இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடல் மூலம் பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்த முடியும்:

- நீங்கள் பெறும் சிகிச்சை மற்றும் கவனிப்பு என்பன உங்கள் விருப்பங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமையும்
- உங்கள் சார்பாக, உங்கள் அன்புக்குரியவர்கள் முடிவுகளை எடுக்க வேண்டி வருமானால், உங்கள் விருப்பங்கள் என்ன என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கும்
- நெருக்கடி நிலை ஏற்படும் போது மட்டுமே சுகாதார நல முடிவுகள் எடுக்கப்படுவதில்லை.

## திட்டமிடுவதற்குத் தயாரா?

### படி 1 – கலந்துரையாடுதல்

உங்கள் உடல்நிலை மோசமானால் உங்கள் விருப்பங்கள் பற்றிப் பேசுவது கடினம். ஆனால், இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டம் உங்களுக்கும் உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் மன அமைதியைக் கொடுக்கும்.

உங்கள் எதிர்கால சுகாதார விருப்பங்களைப் பற்றி சிந்தித்த பிறகு:

- உங்கள் மருத்துவ நிலைமை குறித்தும் எதிர்காலத்தில் அவை உங்களை எவ்வாறு பாதிக்கலாம் என்றும் உங்கள் குடும்ப மருத்துவருடன் கலந்துரையாடுங்கள்
- உங்கள் குடும்பத்தினருடனும் உங்களுக்கு நெருக்கமானவர்களுடனும் உங்கள் உடல்நலப் பாதுகாப்பு விருப்பங்கள் குறித்தும் பேசுங்கள்
- தேவைப்பட்டால், உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் அல்லது சிலரை, உங்கள் சார்பான முடிவுகள் எடுக்க முடியுமா என்று கேளுங்கள்.

### படி 2 – பதிவு செய்தல்

பின்வரும் ஆவணங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம் உங்கள் விருப்பங்களையும் முடிவுகளையும் பதிவு செய்யுங்கள்:

- இறுதி கால பராமரிப்பு சுகாதார உத்தரவு
- நீடித்த அதிகார பத்திரம்
- தெரிவுகள் குறித்த அறிக்கை

இந்த ஆவணங்களை இலவசமாக பதிவிறக்க: **mycaremychoices.com.au**

### படி 3 – பகிர்தல்

உங்களைப் பராமரிப்பவர்களுக்கு உங்கள் சுகாதார நல விருப்பங்கள் குறித்த ஆவணங்கள் எங்கே இருக்கிறது என்பது தெரியும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ள:

- நீங்கள் நம்பிக்கை வைத்துள்ளவர்களிடம் (உதாரணமாக, குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய நண்பர்கள், உங்களுக்காக மாற்று முடிவெடுப்பவர்/கள்) மற்றும் உங்கள் குடும்ப மருத்துவரிடம் இறுதி கால பராமரிப்பு குறித்த திட்ட ஆவணங்களின் நகல்களைக் கொடுங்கள்

**அத்துடன்**

- குயின்ஸ்லாந்து மாநில சுகாதாரத் துறையின் இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் பணிமனைக்கு, உங்கள் ஆவணங்களின் நகல்களை அனுப்பி வையுங்கள். **(விபரங்களுக்கு மறு பக்கத்தைப் பார்க்கவும்)**
- உங்கள் ஆவணங்களை **myhealthrecord.gov.au** என்ற My Health Record இணையத்தளத்தில் பதிவேற்றவும்.

### படி 4 – மீளாய்வு செய்தல்

உங்கள் இறுதி கால பராமரிப்பு குறித்த திட்டமிடல் ஆவணங்களை, தொடர்ந்து மீளாய்வு செய்வது முக்கியம். குறிப்பாக, உங்கள் உடல்நிலை மாறினால் அல்லது பராமரிப்பு குறித்த உங்கள் விருப்பங்கள் மாறியிருந்தால், மீளாய்வு செய்வது முக்கியம்.

